விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 306 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 04 சனிக்கிழமை (21.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மின் கட்டணம் அதிகரிப்பு


(கொழும்பு)

நாட்டில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மின் கட்டண அதிகரிப்புக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு நேற்று அனுமதி வழங்கியது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நோக்கங்களின்றி இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயார்

### ரணிலிடம் சீன ஜனாதிபதி உறுதி



(பீஜிங்)

எவ்வித அரசியல் நோக்கங்களும் இன்றி இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயார் என சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஜனாதிபதி ரணில் 11

## வடக்குக்கான ரயில் நேரத்தில் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக்கான தொடருந்து சேவைகள் சிலவற்றின் நேர அட்டவணையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று முதல் அமுலாகும் வகை 11

## லிட்ரோ விலை மீண்டும் அதிகரிப்பு?


(கொழும்பு)

லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை மீண்டும் எதிர்வரும் விலை திருத்தத்தின்போது 12.5 கிலோ 11

# வடக்கு - கிழக்கில் ஹர்த்தால்

# இயல்பு நிலை ஸ்தம்பிதம்

- வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு கதவடைப்புக்கு ஆதரவு.
- தனியார் பேருந்து சேவைகள் இயங்கவில்லை.
- சந்தைகள் அனைத்தும் வெறிச்சோடின.



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி விவகாரம், தமிழ் பேசும் மக்கள் மீதான அழுத்தங்கள், காணி அபகரிப்பு, மயிலத்தமடு - மாதவனை விவகாரம், சர்வதேச விசாரணை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு, கிழக்கில் நேற்று கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

8 தமிழ்க் கட்சிகள் குறித்த போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.

இந்த கடையடைப்பு போராட்டத்திற்கு ஸ்ரீ லங்கா 02

## பொது முடக்கத்திலும்

## வடக்கு பாடசாலைகள் வழமைபோல் இயங்கின

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் பொது முடக்கம் நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் வட மாகாண பாடசாலைகள் நேற்று வழமைபோல் இயங் 11

## கொக்குத்தொடுவாயில் மின்கலம் வெடித்தது

### நால்வர் காயம்

(முல்லைத்தீவு)

கொக்குத்தொடுவாய் பகுதியில் மின்கலம் வெடித்ததில் காயமடைந்த நால்வர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 11

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

## வட மாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றமுத்த தாழமுக்கம் காணப்படுவதால் மழையுடனான வானிலைக்கு சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள் 11

## மாணவர்களை இலக்கு வைத்து யாழில் வழிப்பறிக் கொள்ளை

### மூவர் கைது; மோ.சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மாணவர்களை இலக்கு வைத்து வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டு வந்த மூன்று கொள்ளை சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாண நகரை அண்டிய பகுதிகளில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்க வரும் மாணவர்களை 11

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சண்முகராஜா கணேசாயினி
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
## ஜெபமாலை ஜோதிமணி பழனியாண்டி

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(17531)

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்


## வடக்கு...

முஸ்லிம் காங்கிரஸும் ஆதரவு வழங்கியிருந்தது.

யாழ். சுன்னாகத்தில் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி கடையடைப்பிற்கு ஆதரவு வழங்கினர்.

அரச திணைக்களங்கள், அரச மற்றும் தனியார் வங்கிகள், அரச போக்குவரத்து சேவை ஆகியன நேற்று இயங்கிய போதிலும், தனியார் போக்குவரத்து சேவைகள் இயங்கவில்லை.

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் நகரங்களிலுள்ள மருந்தகங்கள், உணவகங்கள் தவிர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களும் சந்தை தொகுதிகளும் மூடப்பட்டிருந்தன.

சாவகச்சேரி நீதிமன்ற சட்டத்தரணிகள் கடையடைப்பிற்கு ஆதரவு தெரிவித்து மன்றுக்கு வருகை தராமையால் வழக்கு விசாரணைகள் தவணையிடப்பட்டன. அச்சுவேலி, தெல்லிப்பளை நகரங்களிலும் நேற்று பல கடைகள் மூடப்பட்டிருந்தன.

யாழ். நகரிலும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியதுடன், தனியார் போக்குவரத்து சேவைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

முல்லைத்தீவு - மாங்குளம், மல்லாவி, துணுக்காய் பகுதிகளில் கடையடைப்பு முன்னெடுக்கப்பட்ட போதும், மாங்குளம் பகுதியில் சில கடைகளும் மல்லாவி பகுதியில் சில இடங்களில் வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டன.

குறித்த பகுதிகளில் தனியார் போக்குவரத்து இடம்பெறவில்லை என்பதுடன், அரச போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் கடையடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, கிளிநொச்சி - பரந்தன் நகரிலும் நேற்று வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

வவுனியா நகரில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தது.

மரக்கறி மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் தின சந்தைகளும் மூடப்பட்டிருந்ததுடன், விவசாயிகள் மரக்கறிகளை வீதியில் வைத்து விற்பனை செய்தனர்.

வவுனியாவில் பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தந்திருந்தனர். எனினும், சட்டத்தரணிகள் நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து விலகியுள்ளனர்.

இதனிடையே, மட்டக்களப்பிலும் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி கடையடைப்பிற்கு ஆதரவு வழங்கியுள்ளனர்

மட்டக்களப்பு பொதுச்சந்தை மூடப்பட்டிருந்த நிலையில், வியாபார நடவடிக்கைகள் முழுமையாக முன்னெடுக்கப்படவில்லை.

கிரான் மற்றும் சித்தாண்டி, ஓட்டமாவடி பகுதிகளில் பல கடைகள் மூடப்பட்டிருந்தன. (ம-7,33,60,104)


# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 33 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு இரண்டு பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- நன்னீர் ஊற்று.
- தரகர் தேவையில்லை

தொடர்பு
077 623 4204
076 755 8606
077 076 0389

(17533)



அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு - 2024
புதிய தரம் 06
தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

2024 தரம் 06 இற்கான நாள் வகுப்புக்கள் விஜயதசமி நன்னாள் அன்று ஆரம்பிக்கப்படும்.
24.10.2023 காலை 10.30 - 12.00 வரை
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"



# மரண அறிவித்தல்

## திருமதி சிவசம்பு பரமேஸ்வரி



பிறப்பு 11.07.1938 இறப்பு 19.10.2023

மகாதனை தெல்லிப்பளையை வசிப்பிடமாகக் கொண்ட சிவசம்பு பரமேஸ்வரி அவர்கள் 19.10.2023 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி - தெய்வானபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசம்புவின் அன்பு மனைவியும் இந்திராணி (பிரான்ஸ்), செல்வராணி (தெல்லிப்பளை), உதயகுமார் (பிரான்ஸ்), புஸ்பராணி (நோர்வே), சறோஜினிதேவி (திருநெல்வேலி), ரஞ்சிதமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீஜெயகாந்தன் (பிரான்ஸ்), குமாரசுவாமி (தெல்லிப்பளை), ராஜதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற தயாபரன் (நோர்வே), பாலராஜா (திருநெல்வேலி), ஞானசேகரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாளினி, மிராளினி (பிரான்ஸ்), செந்தூரன், மயூரன் (தெல்லிப்பளை), வேணுஜா, அகல்யா (நோர்வே), தர்ஷன் (திருநெல்வேலி), அனோஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் அனனிஜா, விஷ்வா (பிரான்ஸ்), அருண் (நோர்வே) ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான முருகையா, சரஸ்வதி, வெற்றிவேல் ராசலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அம்பிகாதேவி (சுழிபுரம்), சிற்றம்பலம் (தெல்லிப்பளை) மற்றும் விமலாதேவி (உடுவில்), காலஞ்சென்ற நவரட்ணம் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 19.10.2023 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மகாதனை தெல்லிப்பளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கட்டுபெட்டி தெல்லிப்பளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :-
குமாரசுவாமி - 071 060 9374
பாலராஜா - 077 873 3463
செந்தூரன் - 077 404 7935
மயூரன் - 077 936 0537

மகாதனை,
தெல்லிப்பளை.
(C-7458)



# மரண அறிவித்தல்



## நாகராசா கமலாதேவி

லோட்டஸ் றோட் ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா கமலாதேவி அவர்கள் 20.10.2023 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற சிவசம்பு - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகராசவின் அன்பு மனைவியும் சிறீப்பிரியா, சொலேயன், ரஜீபன்(றொமேனியா), கஜேந்திரன்(பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்), பத்மபிரியா(அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நந்தகுமார், அமலி கிரிசாந்தி, றேணுகா, செல்வமலர், மிர்நாளன்(அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கோபிதா, ஜதுசன், கேதுஜன், டென்சிகா, கேஜிசன், மோனிசன், கஸ்வின், திவோசன், பிறீத்தி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தர்மலிங்கம், மகேந்திரராசா, சிறிஸ்கந்தராசா, காலஞ்சென்ற தேவராசா மற்றும் லோகராசா, ஆனந்தராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 918 1367
077 534 2759
(17536)
தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் பொதுமுடக்கப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நேற்று நிர்வாகப் பொதுமுடக்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தவகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு பூரண ஆதரவை வழங்கியுள்ளன. இதனால் குறித்த இடங்களில் நகர்ப் பகுதிகள் முற்றாக முடங்கியுள்ளன.



யாழ்ப்பாணம்



கிளிநொச்சி



முல்லைத்தீவு

தனியார் பேருந்து சேவை அனைத்தும் முடங்கியுள்ளதுடன் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் மட்டுமே ஆங்காங்கே சேவையில் ஈடுபட்டன. தவணைப் பரீட்சைகள் காரணமாக பாடசாலைகள் இயங்கியதையும் அவதானிக்க முடிந்தது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த பொது போக்குவரத்து உள்ளிட்ட அனைத்து சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்தன. (நி-5-6-30-33-60-104-250-285-299-316)

## யாழ்.போதனாவில் படுகொலை நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மருத்துவமனை படுகொலை நினைவேந்தல் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். போதனா மருத்துவமனை முன்பாக இடம்பெறவுள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.1987 ஆம் ஆண்டு மருத்துவமனைக்குள் நுழைந்த இந்திய இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 75 இற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## தொடர்ந்து அதிகரிக்கும் மசகு எண்ணெயின் விலை

(வோஷிங்டன்)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை தொடர்ந்தும் அதிகரிப்பை பதிவு செய்து வருகிறது.

இதன்படி, மசகு எண்ணெயின் விலை நேற்று உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 90.51 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதுடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 93.90 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலையும் 2.95 அமெரிக்க டொலராக நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## முதல் தடவையாக யாழ்.வரும் ஆதிவாசிகள்

(கொழும்பு)

மஹியங்கனையில் வசித்து வரும் ஆதிவாசிகள் முதல் தடவையாக யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்யவுள்ளனர்.

ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிலஅத்தோவின் தலைமையிலான 60 ஆதிவாசிகள் குழுவினரே முதல் தடவையாக யாழ்ப்பாணத்திற்கு இன்று விஜயம் செய்து இரண்டு நாட்கள் சுற்றுப்பயணம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாணத்திற்கு தாம் செல்லும் முதல் பயணமாக இது அமைவதாகவும் இரண்டு நாட்களும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்தி பெற்ற இடங்களை சுற்றி பார்வையிட்டு மீண்டும் தமது இருப்பிடமான மஹியங்கனைக்கு செல்லவுள்ளதாகவும் தெரிவித்தார். (நி-5)

## மின்கட்டணத்தை உயர்த்தியமை சட்டவிரோதச் செயலாகும்

### சஜித் வலியுறுத்து

(கொழும்பு)

மின்கட்டணத்தை உயர்த்தியமையானது சட்டவிரோதமான செயற்பாடு என்றும் இவ்விடயம் தொடர்பாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு சபாநாயகர் அறிவிப்பொன்றை விடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "31 பில்லியன் ரூபாய் நஷ்டத்தை சரிசெய்ய, 22 வீதத்தால் மின் கட்டணத்தை உயர்த்துவது தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்கள் கோரப்பட்டிருந்தன.

ஆனால், 22 வீதத்தால் அன்றி தற்போது 10 வீதத்தால் மின்கட்டணத்தை உயர்த்த, எந்தவொரு புள்ளிவிபரங்களும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள கட்டண முறைமையிலேயே மின்சார சபை இலாபமாகத்தான் இயங்கி வருகிறது. எனவே, மின்கட்டணத்தை உயர்த்த வேண்டியத் தேவை கிடையாது.

அத்தோடு, சட்டவிரோதமாக,தான் மின்கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. ஓராண்டுக்கு இரண்டு முறை மட்டும்தான் மின்கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள முடியும் என்ற நிலைமை இருக்கும்போது, பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவானது 4 தடவைகள் மின் கட்டணத்தை உயர்த்த அனுமதியளித்துள்ளது.

இது பிழையான நடவடிக்கையாகும். இவ்வாறு பிழையான முறையில் மின்கட்டணத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ள விவகாரம் குறித்து பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு சபாநாயகர் அறிவிப்பொன்றை விடுக்க வேண்டும்" இவ்வாறு சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (நி-5-6)

## சீன ஜனாதிபதியை சந்தித்தார் ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கை சந்தித்துள்ளார்.

சீனாவில் பீஜிங் நகரத்திலேயே குறித்த சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் சீனாவிற்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

சீன துணைப் பிரதமர் டிங்க்ஸ°சியாங் மற்றும் சீன நிதி அமைச்சர் லியு குன் ஆகியோருடன் ஜனாதிபதி நேற்று முன்தினம் கலந்துரையாடினார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை, அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான பல்வேறு துறைகளில் உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து முக்கியமாக கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டேவிட் வோர்னர், மிட்செல் மார்ஷ் சதம் பாகிஸ்தானை வீழ்த்தியது அவுஸ்திரேலியா



டேவிட் வோர்னர், மிட்செல் மார்ஷ் அதிரடி மூலம் பாகிஸ்தானை விழ்த்தியது அவுஸ்திரேலியா.

உலகக்கோப்பை தொடரின் நேற்றைய ஆட்டத்தில் அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் மோதின.

இதில் டாஸ் வென்ற பாகிஸ்தான் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி அவுஸ்திரேலியா அணியின் தொடக்க வீரர்களாக டேவிட் வோர்னர் - மிட்செல் மார்ஷ் களமிறங்கினர். 13 ரன்னில் வோர்னருக்கு கேட்ச் செய்யப்பட்டது. முதலில் நிதானமாக ஆடிய இந்த ஜோடி பின்னர் அதிரடியாக விளையாட ஆரம்பித்தது.

பாகிஸ்தான் பந்து வீச்சை ஓட ஓட விரட்டினர். ருத்ரதாண்டவம் ஆடிய இருவரும் சதம் அடித்து அசத்தினர். இருவரும் இரட்டை சதம் அடிக்க வாய்ப்பு இருந்த நிலையில் மார்ஷ் 121 ரன்னில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அதிரடி பேட்ஸ்மேன் மேக்ஸ்வெல் முதல் பந்திலேயே டக்அவுட் ஆகி வெளியேறினார். அதனை தொடர்ந்து வந்த ஸ்மித் 7 ரன்னில் பெவிலியன் திரும்பினார்.

பாகிஸ்தான் பவுலர்களை பந்தாடிய வோர்னர் 163 ரன்களில் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார். அவர் அவுட் ஆகாமல் இருந்திருந்தால் இரட்டை சதம் அடிக்க வாய்ப்பிருந்தது.

அதனை தொடர்ந்து வந்த வீரர்கள் சொதப்பலாக விளையாடினர். இதனால் 400 ரன்கள் குவிக்க வேண்டிய அவுஸ்திரேலியா 367 ரன்கள் மட்டுமே எடுத்தது.

பாகிஸ்தான் தரப்பில் அப்ரிடி 5 விக்கெட்டுகளையும் ஹரிஸ் ரஃப் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதையடுத்து 368 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி வீரர்கள் அப்துல்லா ஷபீக் 64, இமாம் உல் ஹக் 71, பாபர் அசாம் 17, சவுத் ஷகீல் 34, முகமது ரிஸ்வான் 47, இப்திகார் அகமது 26, முகமது நவாஸ் 14 எடுத்து ஆட்டம் இழந்தனர்.

இந்நிலையில் பாகிஸ்தான் அணி 45 ஓவருக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 301 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் 66 ரன்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக டேவிட் வோர்னர் தெரிவானார். (ம-7)



## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 4 | 4 | 0 | 8 |
| 2 | இந்தியா | 4 | 4 | 0 | 8 |
| 3 | தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 4 |
| 4 | அவுஸ்திரேலியா | 4 | 2 | 2 | 4 |
| 5 | பாகிஸ்தான் | 4 | 2 | 2 | 4 |
| 6 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 2 |
| 7 | பங்களாதேஷ் | 4 | 1 | 3 | 2 |
| 8 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 2 |
| 9 | ஆப்கானிஸ்தான் | 4 | 1 | 3 | 2 |
| 10 | இலங்கை | 3 | 0 | 3 | 0 |

# சிங்கிள் வேண்டாம் விராட் கோலியிடம் ராகுல்

பங்களாதேஷ்க்கு எதிரான போட்டியில்விராட் கோலிசதம்அடித்து அசத்தினார். இது ஒருநாள் போட்டியில் அவரது 48 ஆவது சதமாகும்.

போட்டியில் கோலி-லோகேஷ் ராகுல் ஜோடி, அணியை வெற்றிக்கு அழைத்து சென்றது. கோலி 85 ரன்களில் இருந்தபோது இந்தியா வெற்றி பெற 15 ரன்கள் தேவைப்பட்டது. அப்போது ராகுல் ஒரு சிங்கிள் கூட எடுக்காமல் கோலி சதம் அடிப்பதற்காக வாய்ப்பை ஏற்படுத்தினார்.

இதற்கிடையே கோலி, சதம் அடிப்பதற்காக விளையாடினார் என்று சிலர் சமூக வலைதளங்களில் விமர்சித்தனர்.

இதுதொடர்பாக லோகேஷ் ராகுல் கூறும் போது, விராட் கோலி சதமடிப்பதற்காக நான் சிங்கிள் எடுப்பதை தவிர்த்தேன். அப்போது கோலி என்னிடம், நீங்கள் சிங்கிள் எடுக்காமல் போனால் அது நன்றாக இருக்காது. ஏனென்றால் நான் சொந்த சாதனைக்காக விளையாடுகிறேன் என அனைவரும் நினைப்பார்கள் என்று கூறினார். சிங்கிள் எடுக்கும் படி கூறினார். ஆனால் வெற்றி நமக்கு உறுதியாகி விட்டதால் நீங்கள் சதமடியுங்கள் என்று நான்தான் அவரிடம் கூறினேன். 30 ரன்கள் தேவைப்பட்டபோது அனைத்து பந்துகளையும் நான் தடுத்து ஆடுகிறேன். பெரிய ஷாட்டுகளை விளையாடுங்கள் என்று அவரிடம் கூறினேன்.



இவ்வாறு ராகுல் தெரிவித்தார்.

41-வது ஓவர் முடிவில் இந்தியாவின் வெற்றிக்கு 2 ரன்கள் தேவைப்பட்டது. அப்போது கோலி 97 ரன்களுடன் களத்தில் இருந்தார். 42-வது ஓவரை வீசிய நசூம் முதல் பந்தை லெக் சைடில் வைடாக வீசினார். ஆனால் அந்த பந்துக்கு நடுவர் ரிச்சர்ட் கேட்டல் போரக் வைட் கொடுக்கவில்லை.

2-வது பந்தில் கோலி ரன் எடுக்கவில்லை. 3-வது பந்தில் சிக்சர் அடித்து சதத்தை பூர்த்தி செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-7)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மீன் ஏற்றி வந்த கப்ரக வாகனம் விபத்து



(மன்னார்)

மன்னார் தள்ளாடி பிரதான வீதியில் மீன் ஏற்றி வந்த மஹேந்திரா கப்ரக வாகனம் நேற்று முன்தினம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான தில் வாகன சாரதி பலத்த காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சைக்காக மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாகனத்தில் இருந்த பல ஆயிரக்கணக்கான கிலோ மீன்கள் வீதியில் தூக்கிவீசப்பட்ட நிலையில்பலத்த காயங்களுக்கு உள்ளான வாகன சாரதி மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். குறித்த விபத்து தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(நி-5-6-285)

# பதுளை - மொரஹெல விபத்து ஒருவர் உயிரிழப்பு 18 பேர் காயம்



(கொழும்பு)

பதுளை- மொரஹெல வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 18 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய உல்பாத ஹண்டி என்ற இடத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தும் மீகஹகிவுலவில் இருந்து மொர ஹெல நோக்கி பயணித்த பேருந்துமே மோதி சுமார் 40 அடி உயரத்தில் இருந்து பள்ளத்துக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

காயமடைந்தவர்களில் 8 பேர் பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். (நி-5-6)

# இசை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

புத்திகெட்ட மனிதரெல்லாம் திரைப்படத்தின் வெற்றியினை தொடர்ந்து அந் நிறுவனத்தினரது இரண்டாவது தயாரிப்பான "டக் டிக் டோஸ்" திரைப்படத்தினை ராஜ் சிவராஜ் இயக்கத்தில் பூவன் மதீசன் இசையமைப்பில் வெளிவரவுள்ள திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (நி-5-6)


எம்முடன் சேவையாற்றிய திரு.தி.சாந்தகுமார் அவர்களின் தந்தையின் நினைவலைகள்

முப்பத்தொன்றில்



மண்ணில் 04 03 1940

விண்ணில் 21 09 2023

அமரர். முருகேசு தில்லையம்பலம்

(ஆனைக்கோட்டை ஞானவைரவர் ஆலய பரிபாலகர்)

எப்படியும் வாழ்வதல்ல வாழ்க்கை
இப்படித்தான் வாழவேண்டும்–என
வழி அமைத்து வாழவைத்த தந்தையே
சொல்லிலே உயர்வு கண்டு
சொர்க்கமே புகுந்தீர் ஐயா!
கண்களெல்லாம் கடலாய்ப்பொங்க
கலங்கவிட்டு எங்கே சென்றீர்?
இல்லை நீர் என்று எண்ணித்
தவிக்கின்றோம் மீண்டும் வாரும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திரு.தி.சாந்தகுமார் அவர்களுடன் சேவையாற்றிய ஓய்வுநிலை அதிபர்கள், ஆசிரிய நல்லுறவுகள்.

(17528)


# இராசிபலன்

21.10.2023
ஐப்பசி 4, சனிக்கிழமை
சப்தமி முன்னிரவு 7.47 மணிவரை
பூராடம் முன்னிரவு 6.36 மணிவரை

சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம், திருவாதிரை.

வளவன்

**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பாராத இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கடகம்** உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தை முடிக்க உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், உடல்நலனில் கவனம் தேவை.

**ரிஷபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**சிம்மம்** பிள்ளைகளின் நீண்டநாளைய விருப்பங்களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்** குடும்ப மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சுபதகவல்கள் வந்து சேரலாம், பணப்புழக்கம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், திடீர் பணவரவால் சந்தோசமடைவீர்கள், கௌரவமான நாள்.

**மிதுனம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், கௌரவமான நாள்.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பயணங்கள் கைகூடும்.


**தனுசு** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.

**மீனம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

சமையல் எப்படி இருந்தாலும் பரவாயில்லை பரிமாறுதல் அன்பாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### 25 லட்சம் பெறுமதியான
## மீன்பிடி உபகரணங்கள் விஷமிகளால் தீயிட்டு எரிப்பு



(கரணவாய்)

வீட்டில் வைக்கப்பட்டிருந்த சுமார் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரம் என்பன கடந்த புதன் கிழமை நள்ளிரவு இனந்தெரியாத நபர்களால் தீயிட்டு நாசமாக்கப்பட்டுள்ளதாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடற்கரையில் இருந்து வீட்டில் வைக்கப்பட்டிருந்த 25 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் என்பன இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை முறையிடப்பட்டுள்ளதையடுத்து சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-60)

## கே.கே.எஸ் பகுதியில் தொடரும் திருட்டுக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை. மாங்கொல்லை பகுதியில் பயன்தரு மரங்கள் திருடர்களால் தறித்து எடுத்து செல்லப்படுவதுடன் இரும்பு திருட்டுக்களும் தொடர்வதாகவும் அதனை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 33 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தி . இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த மாங்கொல்லை பிரதேசத்தில் இருந்து இராணுவம் வெளியேறியதை அடுத்து. காணிக்குள் ஊடுருவிய திருட்டு கும்பல்களால் காணிகளுக்குள் இருந்த பொருட்கள். வீட்டின் ஜன்னல். கதவுகளின் நிலைகள் என்பன களவாடப்பட்டுள்ளன. காணி உரிமையாளர்கள் காணிகளை அறிக்கைப்படுத்த அனுமதிக்க வேண்டும் என தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் கோரியதை அடுத்து அதற்கான அனுமதிகளை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பிரதேச செயலரால் அனுமதியளிக்கப்பட்டது.

அதனை அடுத்து இந் நிலையில் வெளிநாட்டில் மற்றும் வெளி மாவட்டங்களில் உள்ள காணி உரிமையாளர்களின் காணிகளுக்குள் செல்லும் திருட்டு கும்பல்கள், காணி உரிமையாளர் . காணியை தம்மை துப்புரவு செய்ய சொன்னதாக கூறி அக் காணிக்குள் உள்ள பெறுமதியான பயன்தரு மரங்களை தறித்து செல்வதோடு உரிமையாளர்கள் வராத காணிக்குள் ஊடுருவும் திருட்டுக் கும்பல்கள் வீட்டில் கதவு, ஜன்னல் நிலைகளை உடைத்து களவாடி செல்லும் நிலை தற்போதும் காணப்படுவதால் காணி உரிமையாளர்கள் தமது காணிகளை அடையாளப்படுத்தி. துப்புரவு செய்து. அறிக்கைபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர். (நி-5-6-33)


SINNATHURAI CHILDREN FOUNDATION සින්නත්තුරෙයි ළමා පදනම சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம்

## திருக்குறள் பாவோதல் போட்டி - 2023

சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம் மற்றும் பனுவல் புக்மார்ட் (Book Mart), வலம்புரி ஊடக அனுசரணையுடன் நடாத்தும் பதினான்கு (14) வயதிற்கு உட்பட்ட மாணவர்களிற்கான திருக்குறள் பாவோதல் போட்டி

மதிப்பிற்குரிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் கற்கை நலன்விரும்பிகள் அனைவருக்கும்

மேற்படி போட்டியில் அனைவரும் ஆர்வத்துடன் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் பிரதேச அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் தொகையை அடிப்படையாகக் கொண்டு இடம், காலம், நேரம் முதலானவை வலம்புரி ஊடகம் மூலம் அறிவிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 01.12.2023 ஆகும்.

வயதெல்லை 7 - 8 வரை : அன்புடைமை, புலால் மறுத்தல் ஆகிய அதிகாரங்களில் இருந்து 05 குறள்கள்.
வயதெல்லை 9 - 10 வரை : விருந்தோம்பல், இனியவை கூறல், கொல்லாமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 06 குறள்கள்.
வயதெல்லை 11 - 12 வரை : செய் நன்றி அறிதல், அடக்கமுடைமை, பயனில சொல்லாமை, ஈகை ஆகிய அதிகாரங்களில் இருந்து 08 குறள்கள்.
வயதெல்லை 13 - 14 வரை : கல்வி, வாய்மை, மானம், பெரியாரைப் பிழையாமை, பண்புடைமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 10 குறள்கள்.

குறிப்பு : குறளும் பொருளும் சொல்லும் அழகு, மேடை ஆளுமை, நிலை, உச்சரிப்பு, சீர் உடை அனைத்தும் கவனத்திற்கொண்டு நடுவர்களால் புள்ளி வழங்கப்பட்டு திறமை மிக்கவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களிற்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி- சி.காண்டீபன் (செயலாளர் - SCF), பனுவல் புக் மாட்(Book Mart), இல.12, யாழ் இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் அல்லது scfthirukkural@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
2. முகவரி, தொடர்பு இலக்கம், மின்னஞ்சல்
3. பாடசாலையின் பெயர், கல்வி கற்கும் தரம்.
4. பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம்.

தொடர்புகளுக்கு 0767427596

(இ)

தகவல் நிர்வாகம் SCF நிறுவனம், னுவல் Book Mart | ஊடக அனுசரணை "வலம்புரி" | நிர்வாகப் பொறுப்பாளர் SCF தலைவர் - சி.துரைராஜா பதிவு எண் GA3126


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2944

### பவிதரன்




### பிரியங்கா




### பிரியா




### தர்சன்




### பானுயா




### நிஷாந்தினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைமையான தேவாலயம் மீது இஸ்ரேல் தாக்குதல்- 8 பேர் பலி

(காசா)

இஸ்ரேல் - பாலஸ்தீன் இடையேயான போர் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டு இருக்கும் வேளை போரில் புதிய அத்தியாயமாக காசாவிலுள்ள பழைமையான தேவாலயம் மீது நேற்று அதிகாலை வேளை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சென்.போர்பிரியஸ் தேவாலயத்தின் மீதே இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் குழந்தைகள் உள்ளடங்கலாக சுமார் எட்டு பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாக காசா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் மீட்புப்பணிகள் தொடர்ந்து வருவதாகவும் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலில் ஆரம்பித்து இஸ்ரேல் தனது தரை வழியான படையெடுப்புக்கு தயாராகி வருவதாக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருந்தார். (நி-5-6)

# போர் நிறுத்தக்கோரி அமெரிக்காவில் போராட்டம் 300 பேர் கைது

(வோஷிங்டன்)

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் படையினருக்கும் இடையே இடம்பெற்றுவரும் போரை நிறுத்துமாறு அமெரிக்காவில் போராடிய 300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் கோரி அமெரிக்கா தலைநகர் வோஷிங்டனில் பாலஸ்தீனிய ஆதரவாளர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கேனான் ரோட்குண்டா பகுதியை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள் போரை நிறுத்தும்படி கோஷங் களை எழுப்பியவாறு பேரணி யாக அமெரிக்க பாராளுமன்ற வளாகத்தை நோக்கிச் சென்றனர்.

இந்நிலையில் போராட்டக்காரர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார் அவர்களை கலைந்து போகுமாறு அறிவுறுத்தினர். எனினும் போராட்டக்காரர்கள் கலைந்து செல்லாததால் சுமார் 300 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)




# வடகொரிய ஆயுதங்களைப் பயன்படுத்திய ஹமாஸ்-அம்பலப்படுத்திய தென்கொரியா




(காசா)

இஸ்ரேல் மீது கடந்த 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் வட கொரியாவின் ஆயுதங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளதாக தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

தொடர்ந்து நடைபெற்று வரும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினரிடையேயான கடும் யுத்தம் காரணமாக இருதரப்பிலும் 4000 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன் பாரியளவிலான மக்கள் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குலுக்கு வட கொரியாவின் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தென்கொரியா குற்றஞ் சாட்டியுள்ளதை தொடர்ந்து வடகெரியா அதனை மறுத்துள்ளது. (நி-5-6)

# ஐப்பசி மாத இராசி பலன்கள் 18.10.2023-16.11.2023

## சிம்மம்

நல்ல காரியங்கள் செய்வதை குறிக்கோளாகக் கொண்ட சிம்ம இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இம்மாதம் உங்கள் இராசிநாதன் சூரியன் நீச்சம் பெற்று குருவால் பார்க்கப்படுகின்றார். எனவே "நீச்ச பங்க ராஜயோக" அடிப்படையில் கிரக பலன்கள் வந்து சேரும். எனவே எந்தக் காரியமும் முதல் முயற்சியில் வெற்றி அடையா விட்டாலும் அடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனையும் ஆன்மிகப் பெரியவர்களின் அறிவுரையும் கைகொடுக்கும். பொருளாதாரத்தில் நெருக்கடி உண்டு.

### சனி வக்கிர நிவர்த்தி

ஐப்பசி 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் வக்கிர நிவர்த்தியாகிப் பலம் பெறுவதால் எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். உங்கள் முன்னேற்றத்தைப் பற்றி மற்றவர்களிடம் விமர்சிக்க வேண்டாம். குடும்பத்தில் குழப்பங்கள் கூடுதலாக இருக்கும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது. கடன் சுமை கூடிக் கொண்டே போகின்றதே என்று கவலைப்படுவீர்கள். இடமாற்றங்களும் வீடு மாற்றங்களும் இனிமை தரலாம். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைப்பது அரிது.

### குரு வக்கிரம்

மாதம் முழுவதும் குரு பகவான் மேஷ இராசியில் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் வக்கிரம் பெறும் பொழுது நன்மை, தீமை இரண்டும் கலந்தே இருக்கும். குறிப்பாக அஷ்டமாதிபதி வக்கிரம் பெறுவது நன்மை தான் என்றாலும் பஞ்சமாதிபதியாகவும் குரு விளங்குவதால் பிள்ளைகள் வழியில் சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். எனவே உங்கள் மேற்பார்வையிலேயே பிள்ளைகளை வைத்துக் கொள்வது நல்லது. பூர்வீக சொத்துத் தகராறுகள் மீண்டும் தலைதூக்கலாம். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமைய குருவை வழிபடுவது நல்லது.

### நீச்சம் பெறும் சுக்கிரன்

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் வலிமை இழந்து நீச்சம் பெறுகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் நீச்சம் பெறும் பொழுது தொழிலில் திடீர் திருப்பங்கள் ஏற்படும். புதிய யுக்திகளைக் கையாண்டு வெற்றி பெறும் சூழ்நிலை உண்டு. உடன்பிறப்புகளின் குணத்தில் மாற்றம் ஏற்படலாம். வழக்குகளில் திடீர் திருப்பங்கள் வரலாம்.

### விருச்சிக புதன்

ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் வருகின்றார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். தன லாபாதிபதி சுக ஸ்தானத்திற்கு வரும்பொழுது தனவரவு திருப்தி தரும். சுகங்களும் சந்தோஷங்களும் கூடும். குறுக்கீடு சக்திகள் அகலும். நெருக்கடி நிலை மாறும். நேசிப்பவர்களின் எண்ணிக்கை உயரும். வாகன யோகம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புகழ் கூடும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு லாபம் திருப்தி தரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வாசல் தேடி வரும். மாணவ-மாணவியர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. பெண்களுக்கு குடும்ப ஒற்றுமை பலப்படும். வருமானம் உயரும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

## கன்னி

அமைதியாக இருந்து அரிய பணிகளைச் செய்யும் கன்னி இராசி வாசகர்களே

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு விரயாதிபதி சூரியனும் சகாய ஸ்தானாதிபதி செவ்வாயும் சஞ்சரிக்கின்றார். எனவே பொருளாதார நிலை திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். வீடு மாற்றங்களும் இடமாற்றங்களும் கூட வரலாம். வேலைப் பளுவின் காரணமாக புதிய உத்தியோகத்திற்கான வாய்ப்பைத் தேடிச் செல்லும் சூழ்நிலை உண்டு. சர்ப்ப சாந்திப் பரிகாரங்கள் நிலைமையைச் சீராக்கும்.

### சனி வக்கிர நிவர்த்தி

ஐப்பசி 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியாவது யோகம் தான். எதை எந்த நேரத்தில் செய்ய நினைத்தீர்களோ அதை அந்த நேரத்தில் செய்ய இயலும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நிறைய நடைபெறும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். பூர்வீகச் சொத்துகளில் உங்களுக்குரிய பங்கு கிடைப்பதற்கான வழி பிறக்கும். அண்ணன்-தம்பிகளுக்குள் இருந்த அரசல் புரசல்கள் மாறும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரலாம். சனிக்குரிய வழிபாடுகளைச் செய்வதோடு அதற்குரிய சிறப்பு தலங்களுக்கும் சென்று அனுகூலம் தரும் நாளில் வழிபட்டு வந்தால் மகிழ்ச்சி நிலைக்கும்.

### குரு வக்கிரம்

மாதம் முழுவதும் குரு பகவான் மேஷ இராசியிலேயே வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். இது நன்மை தான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறும் பொழுது நல்ல சந்தர்ப்பங்கள் தேடி வரும். குறிப்பாக தாய்வழி ஆதரவு கிடைக்கும். இடம். பூமி வாங்கும் யோகம் உண்டு. மண விழா. மணி விழா போன்ற விழாக்கள் மட்டும் அல்லாமல் கிரகப்பிரவேசம் மற்றும் கடை திறப்பு விழாக்கள் கூட நடைபெறலாம். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் கிடைக்கும்.

### நீச்சம் பெறும் சுக்கிரன்

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பண நெருக்கடி அதிகரிக்கும். பாசம் காட்டியவர்கள் உங்களை விட்டு விலகலாம். பக்கபலமாக இருப்பவர்களை அனுசரித்துக் கொள்வது நல்லது. குடும்ப ஒற்றுமை குறையலாம். வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம் தான்.

### விருச்சிக புதன்

ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிநாதன் சகாய ஸ்தானத்தில் உலா வரும் இந்த நேரம் எண்ணங்கள் ஈடேறும். வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். வீடு மாற்றங்கள். இடமாற்றங்கள் உறுதியாகலாம். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். கடல் தாண்டிச் சென்று வெளிநாட்டில் மேற்படிப்பு படிக்க வேண்டும் என்று விரும்பும் பிள்ளைகளுக்கு நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மிகுந்த கவனம் தேவை. தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றங்கள் எளிதில் கிடைக்கும்.

கலைஞர்களுக்கு முயற்சிகளில் வெற்றி உண்டு. மாணவ- மாணவியர்களுக்கு கல்வி விருத்தி ஏற்படும். பெண்களுக்கு சுபச்செலவுகள் அதிகரிக்கும். தொடர்கதையாய் வந்த கடன் சுமை குறையும். இடமாற்றங்கள் இனிமை தரும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 314





தஞ்சாவூருக்கு இவர்கள் போயிருக்கும்போது இள வரசர் பழையாறைக்கு வந்து விட்டால் என்ன செய்கிறது என்பது வானதியின் கவலை.

வேறு யோசனைகளில் ஆழ்ந்திருந்த குந்தவைப் பிராட்டி வானதியைத் திரும் பிப் பார்த்து, "யாரைப்பற்றி யடி கேட்கிறாய்? பொன்னி யின் செல்வனைப் பற்றியோ?" என்றாள்.

"ஆமாம், அக்கா! அவரைப் பற்றித்தான். இளவரசரைப் 'பொன்னியின் செல்வன்' என்று நாலைந்து தடவை தாங்கள் குறிப்பிட்டு விட் டீர்கள், அதற்குக் காரணம் சொல்லவில்லை. பிற்பாடு சொல்வதாகத் தட்டிக் கழித் துக் கொண்டு வந்திருக்கிறீர் கள். இப்போதாவது சொல் லுங்களேன். தஞ்சாவூர்க் கோட்டை இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறது. இந்த யானையோ ஆமை நகர்வது போல் நகர்கிறது!" என்றாள் வானதி.

"இதற்குமேல் யானை வேக மாய்ப் போனால் நம்மால் இதன் முதுகில் இருக்க முடி யாது. அம்பாரியோடு நாமும் கீழே விழவேண்டியதுதான்! அடியே! தக்கோலப் போரில் என்ன நடந்தது என்று உனக் குத் தெரியுமா?"

"அக்கா! 'பொன்னியின் செல்வன்' என்னும் பெயர் எப்படி வந்தது என்று சொல் லுங்கள்!"

"அடி கள்ளி! அதை நீ மறக்கமாட்டாய் போலிருக் கிறது சொல்கிறேன், கேள்!" என்று குந்தவைப் பிராட்டி சொல்லத் தொடங்கினாள்.

சுந்தர சோழ சக்கரவர்த்தி பட்டதுக்கு வந்த புதிதில் அவருடைய குடும்ப வாழ் க்கை ஆனந்த மயமாக இருந் தது. அரண்மனைப் படகில் குடும்பத்துடன் அமர்ந்து சக்கரவர்த்தி பொன்னி நதி யில் உல்லாசமாக உலாவி வருவார்.

அத்தகைய சமயங்களில் படகில் ஒரே குதூகலமாயி ருக்கும். வீணாகான மும் பாணர்களில் கீதமும் கலந்து காவேரி வெள்ளத் தோடு போட்டியிட்டுக் கொண்டு பெருகும். இடையிடையே யாரேனும் ஏதேனும் வேடி க்கை செய்வார்கள். உடனே கலகலவென்று சிரிப்பின் ஒலி கிளம்பிக் காவேரிப் பிரவாகத்தில் சலசலப்பு ஒலி யுடன் ஒன்றாகும்.

சிலசமயம் பெரியவர்கள் தங்களுக்குள் பேசி மகிழ் வார்கள். படகில் ஒரு பக்கத் தில் குழந்தைகள் கும்மாளம் அடித்துக் கொண்டிருப்பார் கள். சில சமயம் எல்லோரு மாகச் சேர்ந்து வேடிக்கை விநோதங்களில் ஈடுபட்டுத் தங்களை மறந்து களிப்பார்கள்.

ஒருநாள் அரண்மனைப் படகில் சக்கரவர்த்தியும் ராணிகளும் குழந்தைகளும் உட்கார்ந்து காவேரியில் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது, திடீ ரென்று, "குழந்தை எங்கே? குழந்தை அருள்மொழி எங்கே?" என்று ஒரு குரல் எழுந்தது. இந்தக் குரல் குந்தவையின் குரல் தான். அருள்மொழிக்கு அப்போது வயது ஐந்து. குந் தவைக்கு வயது ஏழு.

அரண்மனையில் அனை வருக்கும் கண்ணினும் இனிய செல்லக் குழந்தை அருள் மொழி. ஆனால் எல்லாரிலும் மேலாக அவனிடம் வாஞ்சை உடையவள் அவன் தமக்கை குந்தவை. படகில் குழந்தையைக் காணோம் என்பதைக் குந்த வைதான் முதலில் கவனித்தாள். உடனே மேற்கண்டவாறு கூச் சலிட்டாள். எல்லாரும் கதிக லங்கிப் போனார்கள். பட கில் அங்குமிங்கும் தேடினார் கள். ஆனால் அரண்மனைப் படகில் அதிகமாகத் தேடு வதற்கு இடம் எங்கே? சுற் றிச் சுற்றித் தேடியும் குழந் தையைக் காணவில்லை.

குந்தவையும், ஆதித்த னும் அலறினார்கள். ராணி கள் புலம்பினார்கள், தோழி மார்கள் அரற்றினார்கள். படகோட்டிகளில் சிலர் காவேரி வெள்ளத்தில் குதித் துத் தேடினார்கள். சுந்தர சோழரும் அவ்வாறே குதித் துத் தேடலுற்றார்.

ஆனால் எங்கே என்று தேடுவது? ஆற்று வெள்ளம் குழந்தையை எவ்வளவு தூரம் அடித்துக் கொண்டு போயி ருக்கும் என்று யார் கண் டது? குழந்தை எப்போது வெள்ளத்தில் விழுந்தது என்பது தான் யாருக்குத் தெரியும்? நோக்கம், குறி என்பது ஒன்று மில்லாமல் காவேரியில் குதித்தவர்கள் நாலாபுறமும் பாய்ந்து துழா வினார்கள்.

குழந்தை அகப்படவி ல்லை. இதற்குள் படகில் இருந்த ராணிகள் - தோழி மார்களில் சிலர் மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டார் கள். அவர்களைக் கவனிப் பார் இல்லை.

(தொடரும்...)

# தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு
## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### ஒழுக்கக் கல்வி

அறிவோம்பலுக்குக் கல்வி வேண்டி யதே அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி. கல்வியை இள மைப் பருவத்திலேயே பயில வேண் டும். இதனாலேயே "இளமையிற் கல்வி" என்ற புதுமொழி பிறந்தது. ஏட்டுக் கல்வியே கல்வி எனும் கொள்கை யாண்டும் நிலவிவருகிறது. ஏட்டுக் கல்வி மட்டுமன்றி தொழிற்கல்வியும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித் துறைகள் பல் திறத்தன. அவைகளும் ஒவ்வொன்றும் ஒவ்வோர் இயல் புக்குப் பொருந்தியதாக இருக்கும். பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும் மற்றவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங் காகும்.

எல்லோரும் சாதி, மத, இன பேத மின்றி கல்வி கற்க வேண்டும். கல்வி யின் பயனாக முறையாக வாழமுடி யும் இதனையே வெற்றி வேற்கை.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
நற்பாற் குலத்தில் மேற்பாலொருவன்
கற்றிலனாயின் கீழிருப்பவனே
எக்குடி பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக என்பவர்.

என்று கூறுகின்றது. கல்வியின் அவசி யத்தையும் அதன் பயனையும் பல நூல்கள் எடுத்தியம்புகின்றன. அறிவுத் துறையில் இறுதி எண்ணமே தலை சிறந்தது. ஒழுக்கத்துறையில் முதல் எண்ணமே தலைசிறந்தது. எனவே மாணவர்கள் ஒழுக்கக் கல்வியின் மேன்மையைப் புரிந்து முறையாக ஒழுகி எல்லோருடனும் அன்பாகப் பழகி ஒழுக்க சீலர்களாகத் திகழ முடியும். அன்பு சர்வலோக சஞ்சீவி எனவே ஒருவனுடைய ஒழுக்கம் நிறை ந்த கல்வியில் அன்பு, அகிம்சை, சத்தியம் என்பன இழையோடப்பட் டிருத்தல் வேண்டு.

பா.தேனு

### வாழ்க்கை...

வாழ்க்கை என்பது சவால்கள் நிறை ந்த, சங்கடமான அதே நேரம் மிக வும் சிக்கலானது விசித்திரமானது ஆன துடுப்பாட்டம் நீ பந்தாகவும் இருப்பாய், துடுப்பாட்டக்காரனா கவும் இருப்பாய், களக் காப்பா ளனாகவும் இருப்பாய். எல்லாத் திசை களிலும் அடிக்கப்படும் போது நீ பந்தாகின்றாய். மற்றவர்களை நீ அடித்து வீசும் போது துடுப்பாட் டக்காரனாகின்றாய். அடிக்கப் படுவ னுக்குக் கை கொடுக்க நினைக்கு போது உன்னை நோக்கி வீசப்படும் கற்களைப் பத்திரமாகக் கைப்பற்றி உன்னை நீ பாதுகாக்கும் போது களக்காப்பாளனாகின்றாய். எல்லோ ரும் அடித்தும் அடிபட்டும் கொண் டிருக்கும் வேளையிலே உன்னிடம் நடு நிலைமை இருக்கிறோ இல் லையோ நீ நடுவராக இருப்பாய். இங்கே யாருக்கு வெற்றி? களத்திற்கு வெளியே சென்றவனுக்கும் களம் பற்றி ஏதுமே சிந்திக்காதவனுக்கும் மட்டுமே!

பி.டிலக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முள் குத்திய அனுபவம்
காடளவு எச்சரிக்கைக்குச் சமம்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேசிய கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு...

நாட்டிலுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகளைப் பல்கலைக்கழகமாக மாற்றுகின்ற திட்டங்களுக்கு உரிய தரப்புகள் ஒப்புதல் வழங்கியுள்ளன.

தேசிய கல்வியியல் கல்லூரிகளைப் பல்கலைக்கழகமாக மாற்றுவதன் மூலம் ஆசிரிய உருவாக்கத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படுமா எனக் கேட்டால், இல்லை என்பது தான் அதற்கான பதிலாக இருக்கும்.

ஆனால் ஆசிரியர்களை உருவாக்குகின்ற ஓர் உயர்கல்வி நிலையம் பல்கலைக்கழகமாக இருப்பது அதன் பெறுமதியைக் கூட்டுவதாக அமையும்.

அதேநேரம் எதிர்காலத்தில் ஆசிரியத்துவம் சார்ந்த பட்டமேற்படிப்புகளைத் தொடர்வதற்கும் அது வழிவகுக்கும்.

ஆகையால் ஆசிரியர்களை உருவாக்குகின்ற தேசிய கல்வியியற் கல்லூரிகள் பல்கலைக்கழகமாக மாற்றுவது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

ஆயினும் வரவேற்பது என்பதற்கு மேலதிகமாக, கல்வியியல் கல்லூரிகளைப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்குள் அரசியல் நோக்கங்களும் ஆக்கிரமிப்புச் சிந்தனைகளும் இருத்தலாகாதென்பதற்கு அடிக்குறிப்பிடுதல் அவசியமாகும்.

ஏனெனில் இலங்கை ஆட்சியாளர்களின் அநேகமான திட்டங்கள் பேரினவாதத்தின் நலனை முன்னிலைப்படுத்தியதாக இருப்பதுடன் அஃது சிறுபான்மை இன மக்களுக்குப் பாதகமாகவும் அமைகிறது.

தவிர, இவ்வாறான திட்டங்களை அரசாங்கம் முன்மொழியும்போது அது நல்ல நோக்கம் கருதியதென்ற அடிப்படையில் சிறுபான்மை இனத்தவர்கள் அதற்கு ஆதரவும் கனதியான ஒத்துழைப்பும் வழங்குகின்றனர்.

எனினும் காலம் கடக்கும்போதுதான் அரசாங்கம் அறிமுகப்படுத்தியது **மாயமான் திட்டம்** என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இதற்கு நல்ல உதாரணம் எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆம், தமிழ் மக்களின் பட்டப்படிப்புக்காக உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று தமிழ் மாணவர்களை உள்வாங்குவதில் கடும் தோல்வியைச் சந்தித்துள்ளது.

இவ்வாறான தோல்விக்கு எங்களின் தூரநோக்கற்ற சிந்தனையும் மூலகாரணமாக இருப்பதை நாம் கண்டுகொள்ள முடியும்.

ஆம், 1974இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2024ஆம் ஆண்டு 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து பொன்விழாவைக் கொண்டாடும்போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புகளை மேற்கொள்கின்ற மாணவர்களில் அதிகமானவர்கள் சிங்கள மாணவர்களாகவே இருப்பர்.

ஆக, 50 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மாணவர்களுக்காக ஈந்தளிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எவ்வாறு 50 ஆண்டுகள் நிறைவில் சிங்கள மாணவர்களுக்குரிய பல்கலைக்கழகமாக மாறியுள்ளது, மாற்றப்பட்டுள்ளது எனும்போதுதான், தேசியக் கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழகமாக மாற்றும்போது, எங்களின் யாழ்ப்பாணத் தேசியக் கல்வியியல் கல்லூரி பல்கலைக்கழகமாக உருமாறினாலும் அது தமிழ் மக்களின் சொத்தாக இருப்பதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் திட்டங்களையும் இப்போதே நாம் செய்தாக வேண்டும்.

இல்லையேல் அதுவும் எங்களிடம் இருந்து பறிபோவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## அகழ்வில் தடயம் இல்லை நாளை முன்னெடுக்குமாறு உத்தரவு

(தருமபுரம்)

புதையல் தேடி முன்னெடுத்த அகழ்வுப் பணியில் எந்தவிதத்தடயங்களும் கிடைக்கப்பெறவில்லை.

இதனையடுத்து குறித்த அகழ்வுப் பணியை நாளை காலை 9 மணிக்கு மீண்டும் முன்னெடுக்குமாறு கிளிநொச்சி நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி திருநகர் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் புதையல் இருப்பதாக ஒருவர் வழங்கிய தகவலுக்கு அமைய குறித்த அகழ்வுப்பணி நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலை யிலும் தொல்பொருள் திணைக்கள அதிகாரி, கிராம சேவையாளர், பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் முன்பாக குறித்த அகழ்வுப் பணி 17 அடிவரை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது எந்த வித தடயங்களும்அடையாளம் காணப்படாமையை அடுத்து அகழ்வுப்பணியை நாளை முன்னெடுக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (5-6-316)

## சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் இன்று நவராத்திரி விழா

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் வாணிவிழா இன்று சனிக்கிழமை மாலை 3 மணி முதல் ஆச்சிரமத்தின் சிவபூமி அரங்கில் இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், இளைப்பாறிய கிராம சேவகர் சோ.பரமநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில்வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர் ந.விஜயசுந்தரம் சிறப்புரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர் சிவஸ்ரீ ம.பாலகைலாசநாத சர்மா ஆசியுரையையும் நிகழ்த்துவார்.

மேற்படி நிகழ்வில் ஈழ நல்லூர் நாதஸ்வர வித்துவான் ஏ.பி.சுப்பசாமியின் பேரப் பிள்ளைகளான சிறுவர்களின் விசேட நாதஸ்வர - மேளக் கச்சேரியும், பண்ணிசைக் கச்சேரியும், அறநெறி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** கார்கில்ஸ் பூட்சிற்றி கன்னாதிட்டி, கலாசார மையம், மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை, பொலிஸ் நிலையம் யாழ்ப்பாணம், செலிங்கோ, தொழில் திணைக்களம், யாழ்.நூலகம், மெஹறா மோல், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம் பண்ணை, எஸ்.டி.எஸ் மருத்துவமனை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 1 ஆவது குறுக்குத்தெரு, 3 ஆவது குறுக்குத்தெரு, மருத்துவமனை வீதி, கே.கே.எஸ் வீதி, கன்னாதிட்டி, கஸ்தூரியர் வீதி நாவலர் வீதி சந்தி, கோணாந்தோட்டம், எல்.ஐ.சி, நாவலர் வீதி மணிக்கூட்டு கோபுர வீதி, வீரசிங்க மண்டபத்தடி, காய்கறி சந்தை அருகில் மருத்துவமனை வீதி, நீராவியடி, கொட்டடி பழைய மீன் சந்தை, அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** தும்பு தொழிற்சாலை முகாவில் இயக்கச்சி, இயக்கச்சி இராணுவ முகாம், Reecha ரொப்பிக்கல் லங்கா (தும்பு தொழிற்சாலை) - புலோப்பளை, பாரம்பரிய விவசாய பண்ணை, ஆரத்தி நகர், அல்லிப்பளை, தென்னை ஆராய்ச்சி மையம் தர்மகேனி, டயலொக் கோபுரம்-இயக்கச்சி, இயக்கச்சி, கரந்தாய், கோதாண்டர்குளம், கோவில்வயல், மல்வில், மாசார், முகாவில், பளை, புலோப்பளை, சோரன்பற்று, தம்பகாமம், தர்மகேனி, வரகுக்காடு, விநாயகபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## 2 லட்சம் பெறுமதியான மின்வடங்கள் திருட்டு

(கரணவாய்)

வதிரி திக்கம் பகுதியில் அமைந்துள்ள ஹாட்வெயரில் இரண்டு லட்சம் பெறுமதியான வயர் மற்றும் மின்சார வேலை செய்யும் பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வதிரி திக்கம் பகுதியில் அமைந்துள்ள ஹாட்வெயாரிலேயே கடந்த திங்கட்கிழமை இரவு குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹாட்வெயர் உரிமையாளர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை கடையினை திறந்த போது கூரை சீற் விலகி இருப்பதை அவதானித்ததையடுத்து பொருட்களை சரிபார்த்த போது வயர் மற்றும் மின்சார வேலைக்கு பயன்படுத்தும் பொருட்கள் களவாடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5-6-60)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தால் நடத்தப்படும் நவராத்திரி விழா கலை நிகழ்வுகள் நாளை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை யாழ், 211 பிறவுண் வீதியிலுள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

## உரையாடல்

(யாழ்ப்பாணம்)

ராஜனி திராணகம ஞாபகார்த்தமாக "இலங்கையில் தேசிய வாதத்தின் எதிர்காலம்" எனும் தலைப்பிலான உரையாடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.சென்.ஜோண் த பப்டிஸ்ட் தேவாலய பரிஷ் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (நி-5-6)

## இலங்கைக்கு கிடைக்கவுள்ள 330 மில்லியன் டொலர் நிதியுதவி

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் அனுமதி கிடைத்தவுடன் இலங்கைக்கு 254 மில்லியன் விசேட கொள்வனவு உரிமைகள் (சுமார் 330 மில்லியன் அமெரிக்க டொலர்) நிதியுதவி கிடைக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சர்வதேச நாணய நிதியத்தினால் விரிவான கடன் வசதியின் கீழ் இதுவரை இலங்கைக்கு வழங்கப்பட்ட மொத்த நிதி உதவித்தொகையானது 660 மில்லியன் டொலராக கணிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களின் பின்னர் மொரோக் கோவில் இடம்பெற்றுவரும் வருடாந்த கூட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரி பீட்டர் ப்ரூயர் மற்றும் கட்சியரினா ஸ்விரிட்சென்கா ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## நச்சுப்புகையால் 10 பேர் மருத்துவமனையில்

(கொழும்பு)

தலவாக்கலை பிரதேசத்தில் நச்சு புகையை சுவாசித்ததன் காரணமாக 9 பெண்களும் ஆண் ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை தலவாக்கலை நகரிலுள்ள ஆடை மற்றும் அலங்காரப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றின் ஊழியர்கள் நச்சு புகையை சுவாசித்து தலவாக்கலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட போது, கடையின் ஜெனரேட்டர் இயக்கப்பட்டதால், ஜெனரேட்டரில் இருந்து வெளியேறிய நச்சு புகை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

16



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அவளுடைய குதிரை முகம் அந்தவிடத்தில் மாறியமையால் அதற்கு மாவிட்டபுர மென்ற பெயருண்டாயிற்று. அவள் அந்த விடத்தில் ஒரு சுப்பிரமணியர் ஆலயத்தைக் கட்டி, தன் தந்தைக்கு எழுதி, சுப்பிரமணியர் விக்கிரகமொன்றை சோழதேசத்திலிருந்து வரவழைத்துக் கோயிலில் பிரதிஷ்டை செய்தாள். அந்த விக்கிரகம், மாவிட்டபுரத்துக்கு வெகு சமீபத்திலுள்ள ஒரு துறைமுகத்தில் வந்து இறங்கிற்று. ஆகையால் கசாய்த்துறை என்று அழைக்கப்பட்ட அந்தத் துறை முகத்துக்கு காங்கேசன் துறை என்ற பெயருண்டாயிற்று.

மாருதப்புரவீகவல்லியின் பேரழகைக்கண்டு, யாழ்ப்பாணத்துக்குச் சமீபத்தில் அரசு செலுத்திக் கொண்டிருந்த உக்கிரசிங்கன் என்னும் சிற்றரசன் விவாகம் செய்து கொண்டான். அவர்களுக்குப் பிறந்த பாலசிங்கன் என்பவன் அரசு செலுத்திக் கொண்டிருந்த காலத்தில் சோழ மண்டலத்திலிருந்து யாழ் வாசிப்பதில் திறமை பெற்ற அந்தகக் கவி வீராகவன் என்னும் வித்துவான் அவனிடத்தில் வந்து தன்னுடைய யாழ் வல்லமையைக் காட்டினமையால், அரசன் மனம் மகிழ்ந்து, மணற்றிடலாயிருந்த யாழ்ப்பாண நாட்டை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான்.

குருடனாகிய வீராகவன் யாழ் வாசித்துப் பெற்ற நாடாகையால் அதற்கு யாழ்ப்பாணம் என்ற பெயருண்டாயிற்று. பிறகு அவன் தன் நாட்டிலிருந்து பல தமிழ்க் குடிகளைக் கொண்டு வந்து குடியேற்றித் தானே சில காலம் அரசு செலுத்திப் புத்திரர்கள் இல்லாது இறந்தான். கவிவீராகவன் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவன். யாழ்ப்பாணத்தில் குடியேறியவர்களும் பெரும்பாலும் வேளாளரும் அவர்கள் புரோகிதத்துக்காக வரவழைக்கப்பட்ட பிராமணருமே யாவர்?.

வீராகவன் இறந்த பின் பாண்டிமளவன் என்னும் வேளாளப் பிரபு பாண்டி நாட்டுக்குச் சென்று ஒரு இளவரசனை அழைத்து வந்து, சிங்காசனத்தில் இருத்தினான். இவனைப் பாண்டிய இளவரசனென்று கைலாயமாலையிலும் சோழ இளவரசனென்று வையவமாலையிலும் கூறப்பட்டிருக்கிறது. இவனுக்கு ஜெகராஜன் என்றும் சிங்க ஆரியன் என்றும் பெயர்களுண்டு. அவனுடைய கைகளிலொன்று ஊனமாயிருக் தமையால் அவனுக்கு, விஜய கூளங்கைச் சக்கரவர்த்தி என்ற பெயருண்டாயிற்று.

அவன் யாழ்ப்பாணம் வந்தவுடன், அவனை எதிர்ப்பவர்கள் எவருமில்லாமையால் தானிறங்கின விடத்தலேயே ஒரு பட்டணத்தைக் கட்டி அதற்கு நல்லூர் என்று பெயரிட்டான் . இவன் சமாதனத்தை நிலை நிறுத்துவதிலும், சிவாலயங்களைக் கட்டுவதிலும், நாட்டைக் குடியேற்றுவதிலும் மிக்க கவனஞ் செலுத்தி, நீதியாய் அரசு செலுத்தினான்?. இவனும் இவனுடைய சந்ததியாரும் யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற பெயரோடு அரசு செலுத்தி வந்தார்கள்?.

அந்தகக் கவி வீராகவன் வெகு பிற்காலத்துத் தமிழ்ப் புலவன், தொண்டை மண்டலத்தை உறைவிடமாகவுடையவன். அவன் இலங்கையை தரிசித்தது உண்மையாயின், அது பிற்காலத்தில் பரராசசேகரன் காலத்தில் நடந்திருக்க வேண்டும். ஆகையால், யாழ் வாசித்து மணற்றிடரைப் பெற்றவன், முதன் நாம் கூறிய பாணர் வகுப்புப் புலவனாயிருக்கலாம். பாணன் யாழ் வாசித்து பெற்ற பூமியாதலால், யாழ்ப்பாணம் என்ற பெயர் பெற்றதென்பதும் பொருந்தும். இப்படிப்பட்ட பல சந்தேகங்கள் மேற்கூறிய இரண்டு கதைகளிலுமுண்டு. ஆகையால் அவை தற்காலத்தச் சரித்திர ஆராய்ச்சிக்கு ஒத்தவையாயில்லை. ஆகையால் அவை முற்றிலும் உண்மை யென்று ஒப்புக் கொள்ளத்தக்கவையல்ல. ஆயினும் யாழ்ப்பாணச் சரித்திரத்தை உண்மையாய்த் தெரிவிக்கக் கூடிய வேறு நூல்களில்லாமையால் விஜய கூளங்கைச் சக்கரவர்த்தியையே யாழ்ப்பாணத்தின் முதல் அரசனென்று சொல்ல வேண்டியிருக்கிறது என்று அந் நூலில் கூறப்பட்டுள்ளது.

**சரித்திர காலத்துக்கு முந்திய யாழ்ப்பாணத்தைப் பற்றி "யாழ்ப்பாண இராச்சியம்" என்னும் நூலி லிருந்து……**

பேராசிரியர் கலாநிதி சி.க. சிற்றம்பலம் எழுதிய யாழ்ப்பாண இராச்சியம் என்னும் நூலில் சரித்திர காலத்துக்கு முந்திய யாழ்ப்பாணத்தைப்பற்றி மிகச் சுருக்கமாக பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "சரித்திரத்திற்கு முற்பட்ட காலந் தொடக்கம், இலங்கையில் தமிழன் வாழ்ந்தான் என்பது - நடுவு நிலையில் நின்று, இந்நாட்டின் வரலாற்றை ஆராய்ந் தோர் எல்லோரும் ஏற்றுக் கொண்ட உண்மையாகும். காலத்துக்குக் காலம், சிங்கள மன்னரும் தமிழ் மன்னரும் இந்நாட்டை ஆண்டனர். எனினும், பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பியர் இந் நாட்டைக் கைப்பற்றும்வரை, வட இலங்கையில் ஓர் நிலையான தமிழ் அரசும்கிழக்கிலங்கை உட்பட வட கீழ் பிரதேசத்தில் தமிழ் வன்னிய குறுநில மன்னரின் ஆட்சியும் நிலவின. 1619 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் வட இலங்கைத் தமிழ் அரசைக் கைப்பற்றிய போதும், அவர்களுக்கோ அடுத்து வந்த ஒல்லாந்தருக்கோ அடங்க மறுத்து, கைலை வன்னியன், பண்டார வன்னியன் போன்ற குறுநில மன்னர் தமிழ் ஆட்சியைக் காத்து நின்றனர். 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கில ஆட்சியே வன்னியர் ஆட்சியையும் அழித்து இலங்கை முழுவதையும் கைப்பற்றியதோடு 1833 ஆம் ஆண்டு முழு நாட்டையும் ஒரே நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வந்தது."

யாழ்ப்பாண அரசின் தலைநகரமாக இருந்தவையென சிங்கைநகர், நல்லூர் என இரண்டு பெயர்கள் கூறப்படுகின்றன. தற்போதைய யாழ்ப்பாண நகருக்கு அருகேயுள்ள நல்லூர், அரசின் இறுதிக்காலத்தில் தலைநகராயிருந்ததென்பதில் ஐயமெதுவும் இல்லை. சிங்கை நகரென்பது யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக் கரையிலுள்ள வல்லிபுரப் பகுதியில் அமைந்திருந்ததென்றும், இவ்வரசின் ஆரம்பக்காலத் தலை நகரம் இதுவேயென்றும் சிலர் கூற, சிங்கைநகரென்பதும் நல்லூரையே குறிக்குமென்றும், யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரம் நல்லூர் மட்டுமேயென்றும் வேறு சிலர் கொள்வர்.

இதேபோல யாழ்ப்பாண அரசின் ஆட்சி எல்லை பற்றியும் தெளிவு இல்லை. குடாநாட்டுப் பகுதியைத் தளமாகக் கொண்டு சமயங்களில் இவ்வரசின் எல்லை வன்னிப்பகுதி முழுவதையும் உள்ளடக்கி மேற்குக் கரையில் புத்தளம் வரை கூடப் பரந்து இருந்ததாகக் கூறப்படுகிறது. இங்கு கூறப்படும் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாறு பொதுவாக இணையத்தில் இருந்து தொகுக்கப்பட்டவையாகும்.

**யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரியச்சக்கரவர்த்திகள்**

ஆரியச்சக்கரவர்த்திகள் என்பது இலங்கைத் தீவின் வடபாகத்திலிருந்த யாழ்ப்பாண இராச்சியத்தை 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17 ஆம் நூற்றாண்டு முற்பகுதி வரை ஆண்ட அரச வம்சத்து மன்னர்களைக் குறிக்கும். இவ் வம்சத்தின் தோற்றம் பற்றியோ இவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பது பற்றியோ எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தகவல்கள் ஏதும் இல்லை. பெரும்பாலும் இவர்கள் முதலாம் மாறவர்மன்குலசேகர பாண்டியன் என்ற பாண்டிய மன்னனின் அமைச்சர் ஆரியச் சக்கரவர்த்தி வழி வந்தவர்களே என்று கூறப்பட்டாலும் மாற்றுக் கருத்துகளும் உள்ளன. இவ்வரசைத் தொடங்கிய கூழங்கைச் சக்கரவர்த்தி தென்னன் நிகராளன் என்று போற்றப்படுவதால் இது பாண்டியர் ஆணை கீழ் நடந்த இராச்சியம் என்பது பெரும்பாலானோர் கருத்து. யாழ்ப்பாணத்தின் வரலாறு பற்றிக் கூறும் வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள் யாழ்ப்பாண அரசு அரசனில்லாது இருந்த பொழுது தமிழ் நாட்டிலிருந்து அழைத்துவரப்பட்ட இளவரசனாலேயே இந்த வம்சம் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகக் கூறுகின்றன.

எனினும் இம் முதல் ஆரியச் சக்கரவர்த்தியின் காலம் பற்றியோ அல்லது அவ்வரசனுடைய அடையாளம் பற்றியோ பொதுக் கருத்துக் கிடையாது. வடமேற்கு இந்தியாவின், குஜராத், கிழக்கிந்தியாவிலிருந்த கலிங்கதேசம், தமிழ் நாட்டிலுள்ள ராமேஸ்வரம், சோழ நாடு போன்ற பல இடங்களையும் அவர்களது பூர்வீக இடங்களாகக் காட்டப் பல ஆய்வாளர்கள் முயன்றுள்ளார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள் முதலாவது ஆரியச் சக்கரவர்த்தியை கூழங்கைச் சக்கரவர்த்தி, விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி, கோளறு கரத்துக்குரிசில் எனப் பலவாறாக குறிப்பிடுகின்றன. அவ்வரசனின் கையிலிருந்த ஊனம் (கூழங்கை) காரணமாகவே இப் பெயர்கள் வழங்கிய தாகக், காரணமும் கூறப்படுகிறது.

இது தவிர, 13 ஆம் நூற்றாண்டில், தமிழ்ப் படைகளின் உதவியோடு வட பகுதி உட்பட்ட இலங்கையின் ஒரு பகுதியைக் கைபற்றிய கலிங்க தேசத்தவனான, கலிங்க மாகன் என்பவனே முதல் ஆரியச்சக்கரவர்த்தி எனவும் சிலர் நிறுவ முயன்றுள்ளார்கள். காலிங்கச் சக்கரவர்த்தி என்பதே கூழங்கைச் சக்கரவர்த்தியெனத் திரிபடைந்திருக்கக் கூடும் என்பது அவர்களது கருத்து.

இவ் வம்சத்தின் தோற்ற காலம் பற்றியும், கருத்து-எதிர்க் கருத்துகள் (வாதப் பிரதி வாதங்கள்) உண்டு. ஆரியன் என்பது இவர்கள் பிராமணர்கள் என்பதைக் குறிப்பதாகச் சிலரும் இவர்கள் கலிங்கத்து ஆரியர் இனத்தவர் என்பதைக் குறிப்பதாக வேறு சிலரும் கூறுகிறார்கள். ஆரியன் என்பது பாண்டிய மரபினரைக் குறிக்கும் சொல்லாக மகாவம்ச நூல் மற்றும் பிங்கல நிகண்டு தெரிவிக்கின்றது. ஆரியன் என்ற சொல்லிற்கு அழகன், உயர்ந்தவன், பாண்டியன் எனப் பொருட் கொண்டு தென்னிலங்கையில் உரோகணை (ருகுணை) மற்றும் கல்யாணி நாடுகளை ஆரியர் என்ற பெயரில் பாண்டிய வம்சத்தினர் ஆட்சி செய்த செய்தியை மகாவம்சம் கூறுகின்றது.

(தொடரும்…)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் கட்டணம்...

அதன்படி இன்று முதல் மின் கட்டண திருத்தம் பின்வருமாறு இடம் பெறவுள்ளது.

0-30 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 150 ரூபாயில் இருந்து 180 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. குறித்த வகுப்பின் மின் அலகு ஒன்றின் விலை 12 ரூபாய் ஆகும்.

31 முதல் 60 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 300 ரூபாயில் இருந்து 360 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. குறித்த வகுப்பின் மின் அலகு ஒன்றின் விலை 30 ரூபாய் ஆகும்.

61 முதல் 90 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 400 ரூபாயில் இருந்து 480 ரூபாயாகவும் 91 முதல் 120 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 1000 ரூபாயில் இருந்து 1180 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது..

மேலும், 121 முதல்180 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 1,500 ரூபாயில் இருந்து 1,770 ரூபாயாகவும், 180 அலகுகளுக்கு மேல் நிலையான கட்டணம் 2,000 ரூபாயில் இருந்து 2,360 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை மின் கட்டண அதிகரிப்பு அமுலில் இருக்கும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)



















## வடக்குக்கான...

யில் இந்த நேரத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாளாந்தம் பிற்பகல் 1.40க்கு காங்கேசன்துறையிலிருந்து - கல்கிசை நோக்கி பயணத்தை ஆரம்பிக்கும் யாழ்தேவி கடுகதி தொட ருந்து நாளை முதல் முற்பகல் 10 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. (ம-7)

## லிட்ரோ எரிவாயு...

கிராம் சிலிண்டரின் விலை 200 ரூபாயுக்கு மேல் உயர்த்தப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிவாயு விலை தொடர்ந்து அதிகரித்து வருவதனால் எரிவாயு விலையை அதிகரிக்க நேரிட்டதாக தெரிவித்த குறித்த அதிகாரி, நுகர்வோர் பாதிக்கப்படாத வகையில் தற்போது எரிவாயு விலையை உயர்த்த பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

லிட்ரோ எரிவாயு விலை சூத்திரத்தின்படி, அடுத்த எரிவாயு விலை திருத்தம் நவம்பர் 5ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட உள்ளது. (ம-7)

## கொக்குத்...

அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொக்குத்தொடுவாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேம்படி சந்தி வெலிஓயா செல்லும் வீதியில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கண்ணிவெடிகள் அகற்றும் பணிக்காக நேற்றுக் காலை சென்றிருந்தனர்.

இதன்போது தமது பணிக்கு தேவையான மின்கலத்தினை (பற்றறி) வைத்திருந்தபோது ப்ற்றரி பெரும் வெடிச் சத்தத்துடன் வெடித்து சிதறியது.

இதன்போது கண்ணிவெடி அகற்றும் பணிக்காக வந்திருந்த ஊழியர் நால்வர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். (ம-7,299)

## அரசியல் நோக்க...

விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

சீனாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஆகியோருக்கிடையிலான இருதரப்புச் சந்திப்பு நேற்று சீன மக்கள் பொதுச் சபையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுக வேலைத்திட்டத்தை “பெல்ட் அண்ட் ரோட்” வேலைத்திட்டத்தின் கீழான முதலாவது வேலைத்திட்டங்களாக கருதுவதாகவும், இலங்கை உற்பத்திகளை சீனாவிற்கு இறக்குமதி செய்யும் அதே நேரம், இலங்கைக்குள் சீன முதலீடுகளை அதிகளவில் மேற்கொள்வதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் உறுதியளித்தார்.

மேலும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு சிநேகபூர்வ, நடைமுறை மற்றும் துரித ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாரெனவும் சீன ஜனாதிபதி உறுதியளித்தார்.

பாகியன் பிக்கு மற்றும் ஷென் ஹர் ஆகியோரின் குறிப்புக்கள் ஊடாக சீன இலங்கை நட்புறவு தொடர்பிலான பல்வேறு வரலாற்று தகவல்கள் தெரிய வருவதாகவும் ஷி ஜின்பிங் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைமைத்துவத்தின் கீழ், சீன மக்கள் ஒன்றிணைந்து உயர் பொருளாதார வளர்ச்சியினூடாக புதிய சீனாவின் தனித்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், இலங்கை எதிர்கொண்டிருந்த கடுமையான நெருக்கடியிலிருந்து இலங்கை சமூகத்தை மீட்டெடுத்து, அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழி செய்துள்ளார் எனவும் சீன ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம-7)

## மாணவர்களை...

இலக்கு வைத்து, ஆள் நடமாட்டம் இல்லாத் பகுதிகளில் மாணவர்களை வழிமறித்து மிரட்டி அவர்களிடம் பணத்தை வன்முறை கும்பலை சேர்ந்த சில இளைஞர்கள் கொள்ளையடித்து வந்துள்ளனர்.

இது குறித்து யாழ்.மாவட்ட குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மூன்று சந்தேகநபர்களை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

அத்துடன் கொள்ளைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றினையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் கொக்குவில், நல்லூர் பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும், இவர்களுடன் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட மேலும் சில இளைஞர்களை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33,104)

## வட...

ளது.

நேற்றுக்காலை தென் மேற்கு மற்றும் தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழமுக்கம் உருவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்கு மத்திய வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழமுக்கம் ஒக்ரோபர் 23ஆம் திகதியன்று வலுப்பெற வாய்ப்புள்ளதன் காரணமாக தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். காற்றானது தென்கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும் என்பதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40 - 45 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (ம-7)

## வடக்கு...

கின.

வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளில் தவணை பரீட்சை இடம் பெறுகின்றதன் காரணமாக வடக்கு மாகாண பாடசாலைகளில் 98 வீதமான மாணவர்களின் வருகை காணப்பட்டதாக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள தகவல்கள் தெரிவித்தன.

எனினும் ஆரம்ப பிரிவு மாணவர்களின் வருகை சில பாடசாலைகளில் குறைவடைந்த போதிலும் ஏனைய தீவக வலயம் உட்பட சகல பாடசாலைகளிலும் 98 வீதமான மாணவர்களின் வரவு உறுதிப்படுத்தப்பட்டது. (ம-7,33,104)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபம் கல்வி நிலையம்
## THEEBAM EDUCATION CENTRE

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
(கலைக்கோட்டம் அருகில்)

தரம் 6
- தமிழ் மொழி மூலம்
- ENGLISH MEDIUM

புதிய அனுமதிகள்

விஜயதசமி நன்நாளில்

24.10.2023 செவ்வாய்க்கிழமை முதல்..

"தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம்" (17511)

அனுமதிகளுக்கு அழையுங்கள் - 0772247781 நிர்வாகி

# விற்பனைக்கு

Lion(லயன்) பொமேரியன்
நாய்க்குட்டிகள்
விற்பனைக்குண்டு.
தடுப்பூசி போடப்பட்டது. (17526)

**077 172 1074**

# பணிப் பெண் தேவை

யாழ் நகரில் வசிக்கும் வயோதிப
மாதுவை காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணி வரை பராமரிக்க
பெண் பணியாளர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு: (17525)

**077 993 5844**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

# 50% விலை கழிவில் பந்தல் விற்பனைக்கு

தகர பந்தல், கதிரைகள், மேசைகள், சமையல் பாத்திரங்கள், விற்பனைக்கு உண்டு. புதிதாக தொழில் தொடங்குபவர்களுக்கும் ஏற்கனவே பந்தல் சேவை நடத்துபவர்களுக்கும் இலாபகரமானது. (17518)

**077 210 5286**

# கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா மற்றும் தாய்லாந்திலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete mixer)மற்றும் இத்தாலியிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும்(Hoist) எம்மிடம் உத்தரவாதத்துடனும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(குறிப்பு - இந்தியா மற்றும் தாய்லாந்து கொங்கிறீற் மிக்சர் (Original)எம்மிடம் மட்டுமே, போலிகளை கண்டு ஏமாறாதீகள்) (17515)



ஆர்க் என்ரபிறைசஸ்
102, K.K.S, வீதி,யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள், A9 வீதி. 070 191 3571
Hotline : 071 535 7799/ 071 973 9917

# Canada and Italy Visa

Canada, Italy, UK, USA போன்ற நாடுகளுக்கான Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.
மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Visa Consultant
134, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.
**077 038 5584** (17491)

# VILLAGE HOTEL
## பஸ் சேவை
## JAFFNA EXPRESS

AIRPORT PICK UP DROP SERVICE



வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17484)

**T.P:077 544 8503**

# IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17489)

# ICT வகுப்புக்கள் | திரு.இ.குமரன் ICT

| GCE (O/L) | Grade 10 | Gr.6,7,8,9 |
|---|---|---|
| Theory / Practical | Theory / Practical | Theory |
| Unit Exam | Unit Exam | Practical |
| | | Unit Exam |
| Paper Class | Paper Class | Robotics |

R.Kumaran-B.Sc. | Eng. & Tamil Medium

யாழில் ICT இல் அதிக A சித்தி பெறும் நிறுவனம்
ICT துறையில் 20 வருட கற்பித்தல் அனுபவம்
100% Practical-Oriented Class

Gr.6 -11 - Arduino / Robotics / Programming Classes

MIS ICT COLLEGE TP:0776577359, #74, Sabapathy Lane, Jaffna & Kondavil East,Kondavil. (17523)

# வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை

மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்
T.P : 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna. (17512)

# அமெரிக்க லொத்தர் விசா

2025 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. (17512)
**077 755 4528**

# வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்

இம்மாதம் 21 ஆம் திகதி முதல் தீபாவளி தினம் வரை

# இந்தியன் செலக்ஷன்

## தீபாவளி
ஜவுளிக் கொண்டாட்டம்



பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் டொப், பாட்டி புரொக், சேட், ரீ சேட், டெனிம் ஜீன்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகளையும் இன்னும் மங்கையர் மனங்கவரும் ஆடைத் தெரிவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

## விஷேட விலைக்கழிவு


டொப் 500/=
ரெடிமேட் சல்வார் 750 /=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே (17527)

காலம்: 21.10.2023 முதல் தீபாவளி தினம் வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும திறந்திருக்கும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு



- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் (C-7459)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777

# அமெரிக்க அதிஸ்ட விசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2024 நீங்களும் அமெரிக்காவில்...

இன்னும் 13 நாட்களே

இந்த வருடம் A/L

55000 இலவச விசாக்கள்

0768226244

(C-7459)

V2 TRAVELS

# Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 264/= (max3Kg) |
| 1 Kg அவல் | - 259/= |
| 1 Kg சர்க்கரை | - 289/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 175/= |
| 1 Kg கோதுமை மா | - 179/= |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 289/= (max 3Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 435/= |
| 1 Kg றவை | - 288/= |
| 400 g அங்கர் பால்மா | - 1030/= ~~(1080/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |
| 70g Baby Soap | - 108/= ~~(145/=)~~ |
| 1 மங்களம் ஊதுபத்தி | - 160/= ~~(200/=)~~ |

1030/=



~~1080/-~~

(17537)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org